நல்லூர் கிளை நூலகம்
மாநகர ...
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 22 வியாழக்கிழமை (05-03-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 99

# மணலாறில் அதிரடி 14 படையினர் பலி!

## பெருமளவு ஆயுதங்களும் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 5

மணலாற்றுப் பகுதியில் நேற்று முன் தினம் இரவு விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

விடுதலைப் புலிகளின் விசேட அதிரடிப் படைப் பிரிவினர் நடத்திய 3 நிமிட —அதிவேகத் தாக்குதலில் — 14 படையினர் உயிரிழந்தனர்; 13 நவீன ரக ஆயுதங்களை புலிகள் கைப்பற்றினர்.

மண்கிண்டி மலை சிங்களக் குடியேற்றத்தில் அமைந்த இராணுவ முகாமில் இருந்து சுமார் 500 யார் தொலைவில் அமைந்திருந்த படையினரின் காவலரண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

மணலாறில் செவ்வாய் இரவு புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட ஆயுத - தளபாடங்களின் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ | ஏ. கே. எல். எம். ஜி. | — 1 |
| ★ | ரி-56-1 ரகத் துப்பாக்கிகள் | — 3 |
| ★ | ரி-56-2 ரகத் துப்பாக்கிகள் | — 2 |
| ★ | ரி-81 ரகத் துப்பாக்கி | — 1 |
| ★ | 303 ரகத் துப்பாக்கி | — 1 |
| ★ | 40 மி. மீ. பிஸ்டல் | — 1 |
| ★ | ஏ. கே. எல். எம். ஜி, றம் மகஸீன் | — 1 |
| ★ | 40 மி. மீ. பிஸ்டல் ஷெல்கள் | — 10 |
| ★ | ஜே. ஆர். கிரனேட் | — 5 |
| ★ | ஏ. கே. எல். எம். ஜி. ரவைகள் [லிங்குடன்] | — 900 |

[6 ஆம் பக்கம் பார்க்க]

### வீரமரணம்

மணலாறுப் பகுதியில் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலின் போது மேஜர் சதாத் அல்லது வீமன் [அமிர்தநாதன் அருளப்பு — அடம்பன், மன்னார்] என்ற போராளி வீரமரணமடைந்தார். [உ-5]

### பீரங்கித் தாக்குதல்

நேற்றுக் காலை வளலாய், தொண்டமானாறு கடற் பிராந்தியத்தில் இருந்து கடற் படையினர் கரையோரப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதலை நடத்தினர்.

## மீண்டும் ஆரம்பம்

# மக்கள் குடியிருப்புகள் மீது கண்டபடி ஷெல் தாக்குதல்!

## அராலியில் அகதிகள் ஐவர் பலி!!

யாழ்ப்பாணம், மார்ச் 5

செவ்வாய்க்கிழமை நள்ளிரவிலும், நேற்று அதிகாலையிலும் குடாநாட்டின் பல பகுதிகளிலும் பரவலாக மக்கள் குடியிருப்புகள் மீது படையினர் கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

மண்டைதீவு, மண்கும்பான், காரைநகர், பலாலி, பூநகரி ஆகிய இடங்களில் உள்ள முகாம்களில் இருந்தே படையினர் கண்டபடி, கண்மூடித்தனமாக ஷெல் வீச்சுக்களை நடத்தினர்.

பொன்னாலையில் இருந்து இடம்பெயர்ந்து அகதிகளாக வந்து அராலியில் தங்கியிருந்த் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் ஷெல் வீச்சுக்குப் பலியானார்கள்.

எந்தப் பக்கத்திலிருந்து ஷெல் வீச்சு நடத்தப்படுகிறது என்பதை நிச்சயமாக நிர்ணயிக்கமுடியாதவாறு நான்கு திசைகளிலிருந்தும் அவை வந்து கொண்டிருந்தன.

செவ்வாய் நள்ளிரவு 12 மணி தொடக்கம் அராலி, யாழ். பண்ணை, கோட்டைப் பகுதி, அலுப்பாந்தி, கொட்டடி ஆகிய பகுதிகளில் பெரும் எண்ணிக்கையான ஷெல்கள் விழுந்து வெடித்தன.

இதனால் யாழ்ப்பாண நகரப்பகுதி, அதனை அண்டிய பகுதிகள், வலிகாமம் மேற்குப் பகுதி ஆகிய இடங்களில் ஆழ்ந்த நித்திரையில் இருந்த

[6 ஆம் பக்கம் பார்க்க]

05.3.92

## பழுதடைந்த அரிசியுடன் யாழ். நோக்கி வரும் கப்பல்!

யாழ்ப்பாணம், மார்ச் 5

பழுதடைந்ததாகக் கருதப்படும் 1,300 மெற்றிக் தொன் அரிசி, யாழ்ப்பாண மக்களுக்கு விநியோகிக்க வென வந்துகொண்டிருக்கிறது!

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை வந்து சேருமென எதிர்பார்க்கப்படும் ''லில்லி'' கப்பல் அந்தப் பழுதடைந்த அரிசியை ஏற்றிக்கொண்டு வருகிறது.

யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கென 'லில்லி' கப்பலில் ஏற்றப்பட்ட 1,300 தொன் அரிசியும் பழு

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பொட்டம்மான் மீது கொழும்பிலும் வழக்கு?

கொழும்பு, மார்ச் 5

விடுதலைப் புலிகளின் [உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மான்மீது வழக்குத் தொடருவது குறித்து ஸ்ரீலங்காப் பொலீஸார் சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரியுள்ளனர் என்று இலங்கை வானொலி அறிவித்தது.

முன்னாள் பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா கொலையுண்ட குண்டு வெடிப்புச் சம்பவம் மற்றும் கூட்டுப்படைகள் தலைமையக குண்டுவெடிப்புச் சம்பவம் ஆகியவற்றுடன் பொட்டம்மான் தொடர்புபட்டிருந்தார் என்று கூறும் சாட்சியங்களை பொலீஸார் சட்டமா அதிபருக்கு அனுப்பியுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது. [உ-எ]

## முச்சந்தி முரளி



பழைய குருடி கதவைத் திறவடி என்ற கதை தான் பாருங்கோ...!

### வவுனியா ஊரடங்கு நீக்கம்

கொழும்பு மார்ச் 5

வவுனியா மாவட்டத்தில் அமுல் செய்யப்பட்டு வந்த ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை 5 மணியுடன் நீக்கப் பட்டுள்ளதாக கூட்டுப் படைகள் தலைமையகம் அறிவித்தது. [உ-எ]

## வவுனியா நடவடிக்கையால் 5,000 பேர் அகதிகளாயினர்

### உடமைகளும் சூறை!

வவுனியா பகுதியில் ''வன்னி விக்கிரம - III'' இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்த மக்களது உடமைகள் படையினரால் சூறையாடப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்து] பாடசாலைகள், கோவில்களில் தங்கியுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

கட்டையர் குளம், தவசியாக்குளம், ஈச்சங்குளம், கல்மடு, காக்கையன்குளம் ஆகிய பகுதிகளே இராணுவ நடவடிக்கைகளால் பெரிதும் பாதிப்படைந்திருக்கின்றன.

இதனிடையில் —

நேற்று ஆறாவது நாளாக அப்பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்றதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. விமானத் தாக்குதல்களும் நேற்றுப் பரவலாக இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-5[

## தீவக கர்ப்பிணித்தாய்மார் யாழ். வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், மார்ச் 5

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தீவுப்பகுதியில் இருந்து பத்துப்பேர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

இவர்களில் ஐவர் கர்ப்பிணித் தாய்மார், மற்றும் ஐவர் இவர்களுக்கு உதவியாக வந்தவர்கள்.

ஐந்து கர்ப்பிணித் தாய்மாரில் ஒருவர் நெடுந்தீவைச் சேர்ந்தவர். மற்றும் நால்வரும் நயினாதீவைச் சேர்ந்தவர்கள்.

நேற்றுக் காலை 5.00மணி அளவில் இவர்கள் நயினாதீவில் இருந்து கடற்படை படகு மூலம் காரைநகருக்கு அழைத்து வரப்பட்டனர்.

காரைநகரில் இருந்து காங்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## விகாரையில்கூட்டம்நடத்திய 16 மாணவர்கள் கைது!

லண்டன், மார்ச் 5

கொழும்புக்குத் தெற்கேயுள்ள புத்த விகாரை ஒன்றில் கூட்டம் நடத்தியதாகக் கூறப்படும் 16 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் ஜே. வி. பி. இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

கைதான 16 பேரும் கடந்த 3 தினங்களாக எங்கே வைக்கப்பட்டுள்ளனர் என்பது தெரியவில்லை என்று ஏஜென்ஸிச் செய்திகள் குறிப்பிட்டன.

கைதானோரில் 6 பேர் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சிலர் பௌத்த பிக்குகள்.

இவர்கள் அரசாங்கத்தின் கல்வித்துறைக் கொள்கையைக் கண்டித்தே கூட்டம் நடத்தியதாகச் சொல்லப்படுகிறது.

ஆனால் இவர்கள் ஜே.வி. பி. இயக்கத்தின் தீவிர ஆதர

[6ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது கட்டப்பிராய், கோப்பாய் தெற்கு, கோப்பாயில் வசிப்பவருமாகிய கருணலிங்கம் [ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, கோப்பாய்] – சோதிமலர் [தாதிய உத்தியோகத்தர், யாழ் போதனா வைத்தியசாலை] தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன்

### ★ செல்வன் ரூபவிநோத் ★

தனது முதலாவது பிறந்தநாளை இன்று [5-3-92] வியாழக்கிழமை கோப்பாயில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அத்தைமார், பேரன்மார், பேத்திமார், மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், ஜேர்மனியில் உள்ள பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, அக்காமார், மாமா, மாமி, மச்சான்மார், மச்சாள்மார், நண்பர்கள் ஆகியோர் சகல கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் சிறப்புற வாழவேண்டுமென வாழ்த்துகின்றனர்.

[19961]

---

தென் இந்திய திருச்சபை

யாழ். மறை மாவட்டம்

## பேராயர் கலாநிதி ச. குலேந்திரன்

## நினைவு அஞ்சலிக் கூட்டம்

**மார்ச் மாதம் 16ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு பரி. யோவான் கல்லூரி ஜுபிலி மண்டபத்தில் நடைபெறும்.**

மதகுருமார், அபிமானிகள் மற்றும் அறிஞர்கள் கலந்து கொள்கின்றனர்.

அன்பர்கள் யாவரும் வருகைதந்து சிறப்பிக்குமாறு அழைக்கப்படுகின்றனர்.

**வண. ஜி. டி. ஆனந்தராஜன்**
செயலாளர், தெ. இ. தி. யா. ம.


[சி-1578]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம்:
22
—
6
—
1908

மறைவு:
4
—
2
—
1992



## அமரர் இராமலிங்கம் நகுலேசு

(இளைப்பாறிய பிரதம தபால் – தந்தி திணைக்கள அத்தியட்சகர்)

**திதி: 5 3-1992**

''குலமகனாய், குடும்பத்தின்
ஒளி விளக்காய், பண்பின் உறைவிடமாய்,
பாசமுடன் நீர் எம்மைக் காத்தீர்!
எம் நெஞ்சில் உம் நினைவு
என்றும் நிலைத்திருக்கும்.''

எனது தலைவனின் இறுதிக் கிரியையில் பங்கு கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், வேறு வழிகளில் உதவியவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இன்று (5-3-92) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

**மனைவி - திருமதி நா. நகுலேசு.**

கட்டுடை,
மானிப்பாய்.

(19954)

---

## கிளிநொச்சியில் தமிழீழ பெண்கள் மாநாடு

யாழ்ப்பாணம், மார்ச் 5

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினர் நடத்தும் தமிழீழப் பெண்கள் மாநாடு நாளை மறுதினம் 7 ஆம் திகதியும் மறுநாள் 8 ஆம் திகதியும் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இரு தினங்களிலும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் மாநாட்டு நிகழ்ச்சிகளுக்கு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி. ஜெயா தலைமை வகிப்பார்.

இரண்டாம் நாள் [8 ஆம் திகதி] நிகழ்ச்சிகளின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் ஆசிச் செய்தி இடம்பெறும்.

அன்றைய தினம் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜாவும் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார். [இ-5]

## பட்டதாரி பயிலுநர் கூட்டம்

யாழ். மாவட்டத்தில் பட்டதாரி பயிலுநர்களாக கடமையாற்றுவோருக்கான கூட்டம் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெற உள்ளது. [இ-3]

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி குழு நடத்தும் உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றும் விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் சனிக்கிழமைகாலை 9.30 மணிக்கு கோண்டாவிலில் உள்ள விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்டச் செயலகத்தில் நடைபெறும். [இ-5]

## அஞ்சலிக் கூட்டம்

வடமராட்சி. மார்ச் 5

வளலாய்ப் பகுதியில் வீர மரணம் அடைந்த கப்புதூவைச் சேர்ந்த மேஜர் இளங்கோவின் 90 ஆவது நாள் அஞ்சலிக் கூட்டம் இன்று வியாழன் கப்பு தூ விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

[இ-165]

## இலவச வகுப்புகள்

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் ஆதரவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆண்டு 5 தொடக்கம் ஆண்டு 11 வரையிலான இலவச வகுப்புகள், இன்று வியாழன் பிற்பகல் 3-00 மணிக்கு அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட உள்ளன. [இ]

## ஓய்வூதிய வவுச்சர்கள்

நவாலி, மார்ச் 5

மலேசியா, சிங்கப்பூர், பர்மா ஓய்வூதியம் பெறுவர்களின் ஓய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் அந்தந்த வங்கிகளுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டன. [இ-100]

## குருநகரில் தெருக் கூத்து

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கடற்புலிகளின் மகளிர் முன்னணியின், 'புறப்பட்டு வாருங்கள்' என்னும் தெரு கூத்து நாடகத்தை குடாநாட்டின் பல பகுதிகளிலும் நடத்தி வருகின்றனர்.

நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் குருநகர், றெக்கிளமேஷன் தண்ணீர்த் தாங்கிச் சந்தியில் நிகழ்த்திய தெருக்கூத்து நிகழ்ச்சியை …

[ஓ-51]

---

# மரண அறிவித்தல்கள்

## சுந்தரம் சிவராசா

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணை கேசாவில் பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசாரி சுந்தரம் சிவராசா 29-2-92 அன்று கொழும்பில் காலமாகி விட்டார். இவர் சுந்தரம் சுப்பிரமணியத்தின் சகோதரனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், மோகனேஸ்வரன், செல்வராணி, ஜெயசோதி, ராஜசேகர் ஆகியோரின் தகப்பனாரும், நந்தகுமார், ஜெயசிறி ஆகியோரின் மாமனாரும், கோபிநாத்தின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாருடைய ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

26, நாவலடி லேன்,
வண். மேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல் :
**மனைவி, பிள்ளைகள்**

[19960]

---

## திருமதி கனகசபை இரத்தினம்

சுதுமலை வடக்கைச் சேர்ந்த திருமதி கனகசபை இரத்தினம் 3-3 92 அன்று கொழும்பில் காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற திரு. வல்லிபுரம் கனகசபையின் அன்பு மனைவியும், திரு. பரராஜசிங்கம், திருமதி துரைசிங்கம் சிவாம்பிகை [பட்டு], திருமதி கோபாலபிள்ளை புனிதவதி, காலஞ்சென்ற திரு. தனபாலசிங்கம் [செட்டி], திரு. பாலசிங்கம் [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி ப. பரமேஸ்வரி, திரு. வ. துரைசிங்கம், காலஞ்சென்ற க. கோபால், திருமதி பா. சாந்தா ஆகியோரின் அருமை மாமியாரும், திருக்குமார் [ஜேர்மனி], சத்தியகுமார், திருமதி கிருபாகரன் சுசிர்தா, கௌரி, ஜெயக்குமார், ஜமுனாதேவி, பாலகுமார், சிவகுமார், கிருஷ்ணகுமார், துர்க்கா, மயூரன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், ஹிருபாஹரியின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் மரணச் சடங்குகள் கொழும்பில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
**க. பரராஜசிங்கம்**
[மகன்]

[19963]

---

## திரு. நமசிவாயம் மகேசன்

கொட்டடியைச் சேர்ந்த நமசிவாயம் மகேசன் 28-2-92 இல் அவுஸ்திரேலியாவில் காலமானார். இவர் காலஞ்சென்ற நமசிவாயம் — செல்லாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், மனோரஞ்சிதத்தின் அன்புக் கணவரும், நமசிவாயம் [ரமணா], செல்வரஞ்சனி, முருகேசன், அருச்சுனன், நகுலன், உமையாள், சகாதேவன், கருணன் ஆகியோரது அன்புத் தகப்பனாரும், சாந்தி, லோகன், பாஸ்கரன் ஆகியோரது அருமை மாமனாரும், தையல்நாயகி, நடேசன், மகேஸ்வரி, சரஸ்வதி, காலஞ்சென்ற வாலாம்பிகை, சிவசுப்பிரமணியம் ஆகியோரது அன்புச் சகோதரனும், சிவஞானம், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, கணேசன், இராஜேந்திரம், அன்னலட்சுமி, மதிவதனி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-2-92 இல் அவரது கீழ்க்காணும் முகவரியில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. சிவசுப்பிரமணியம்
[தம்பியார்]

**23, Montrose Street,
Lynwood,
Western Australia – 6147,
Australia.**

[19962]

---

## கனகசபை இராஜசபை

[ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்,
இரத்மலானை இந்துக்கல்லூரி]

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட கனகசபை இராஜசபை [I. A. Lond.[ 4-3-92 நேற்றுக் காலமானார். இவர் வள்ளியம்மையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற A. கனகசபையின் [ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி] சிரேஷ்ட புத்திரரும், ஜெகதீஸ்வரி [Dental Surgeon, அவுஸ்திரேலியா], விக்னேஸ்வரி ]Vet. Surgeon, அவுஸ்திரேலியா], காலஞ்சென்ற புவனேந்திரன் [விரிவுரையாளர், பரியோவான் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. P. சச்சிதானந்தம் [Vet. Surgeon], Dr. றட்ணமோகன் ஆகியோரின் மாமனாரும், நடனசபை [M. A.], தேவசபை [B. Sc. Lond.], காலஞ்சென்ற விமலாதேவி ஆகியோரின் சகோதரரும், அரசு [கோலாலம்பூர்], காலஞ்சென்ற குலசேகரம் மற்றும் நடராசா, கணவதிப்பிள்ளை, சின்னத்துரை, பொன்னம்பலம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 5-3-92 இன்று நண்பகல் 12 மணிக்கு கோப்பாய் வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**திருமதி இ. வள்ளியம்மை**
[மனைவி]

கோப்பாய் வடக்கு.

[19958]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# யாழ். மாவட்ட செலவுக்கு ரூபா 8 கோடி கிடைக்கும்

## கொழும்பில் அரச அதிபருக்கு உறுதி

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ். மாவட்ட நிர்வாகச் செலவுக்கு 8 கோடி ரூபாவை உடன் வழங்க கொழும்பில் அமைச்சுககள் மட்ட உயர் அதிகாரிகள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

நிர்வாகச் செலவு குறைப்பு குறித்து, யாழ். அரச அதிபர் கொழும்பில் உயர்மட்ட அதிகாரிகளுடன் அண்மையில் பேச்சுக்கள் நடத்தி இருந்தார்.

யாழ்ப்பாண மாவட்ட சிவில் நிர்வாகச் செலவுக்கு ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்குரிய தொகைகள் அரைவாசியாகக் குறைக்கப்பட்டு இருந்தது.

இப்போது ஓரளவிலேனும் செய்யும் பணிகளை அரைவாசிப் பணத்துடன் செய்ய முடியாது என்று அரசாங்க அதிபர் சுட்டிக்காட்டி இருந்தார்.

அதை அடுத்து ஒய்வூதியக் கொடுப்பனவுக்காக உடனடியாக 6 கோடி ரூபாவை வழங்க சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைவிட, புனர்வாழ்வு வேலைகளுக்கு ஒரு கோடி ரூபாவும், பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்துக்கு ஒரு கோடி ரூபாவும் உடனடியாக கிடைக்க இருப்பதாக அரச அதிபர் தகவல் வெளியிட்டார்.

(ஒ-3)

## இன்றைய ஆட்டங்கள்

கன்பரா, மார்ச் 5

உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இன்று ஆஸ்திரேலியாவை எதிர்த்து இங்கிலாந்தும், தென் ஆபிரிக்காவை எதிர்த்து இந்தியாவும் விளையாடும்.

முதலாவது ஆட்டம் ஆஸ்திரேலியாவிலும், இரண்டாவது ஆட்டம் நியூசிலாந்திலும் நடைபெறும். (த)

# முதுபெரும் கலைஞர்களுக்கு இணுவிலில் பாராட்டு விழா

தெல்லிப்பழை, மார்ச் 5

முதுபெரும் நாதஸ்வர மேதைகளான மாவிட்டபுரம் எஸ். கே. இராசா, யாழ்ப்பாணம் பி. எஸ். ஆறுமுகம் பிள்ளை ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்பட உள்ளனர்.

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் பாராட்டு விழா ஆரம்பமாகும்.

விழாவுக்கு சங்கீதபூஷணம் பொன் சுந்தரலிங்கம் தலைமை வகிப்பார்.

விழாவில் சமயப் பெரியார்கள் பலர் ஆசியுரை நிகழ்த்துவர். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் ஆகியோர் சிறப்புரை ஆற்றுவர், நவாலியூர் நா. சச்சிதானந்தன், கவிஞர் புதுவை இரத்தினதுரை, கலாசூரி நா. க. பத்மநாதன், இ. ஜெயராஜ் ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்துவர்.

நாதஸ்வர வித்துவான் வி. கே. பஞ்சமூர்த்தி நன்றியுரை வழங்குவார்.

[ஒ-68]

## படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதி:

# ஆசிரியர்களுக்குச் சம்பளம் பழைய இடங்களிலேயே

கொழும்பு, மார்ச் 5

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் முன்னர் கடமை புரிந்த ஆசிரியர்களுக்கு, வேறு இடங்களில் இனி சம்பளம் வழங்கப்பட மாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு ஜனவரி மாதம் முதல் சம்பளம் வழங்கப்படமாட்டாது என்றும்—

அவர்கள் வடக்கு-கிழக்கில் தாம் கடமையாற்றிய பாடசாலைகளிலேயே கொடுப்பனவைப் பெறவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆசிரியர்களுக்கு மேல்மாகாணசபை, ஜனவரி முதல் சம்பளம் வழங்குவதை நிறுத்திக்கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இன்னமும் பிரச்சினைகள் நிலவும்— வடக்கு-கிழக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் இருந்து— இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு மட்டுமே மேல்மாகாணசபை தொடர்ந்தும் சம்பளம் வழங்கும் என்று கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரன் தெரிவித்தார். (ஒ-த)

## யாழ். மாநகர சபைப் பிரிவில்

# ஐ. நா. சிறுவர் நிதியத்தில் சுய வேலைவாய்ப்பு திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

சுய வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம் ஒன்றை ஐ. நா. சிறுவர் நிதியம், யாழ். மாநகர சபைப் பிரிவில் முதல் தடவையாக நடைமுறைப்படுத்தவிருக்கிறது.

ஐ. நா. சிறுவர் நிதியம் இதுவரை காலம் கட்டட, குடிதண்ணீர் திட்டங்களுக்கே நிதி உதவி வழங்கி வந்தது.

போர்க்கால சூழ்நிலையில் பாரிய திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாததால், மக்கள் வருமானம் பெறத்தக்க திட்டத்தை நடைமுறைப்படுத்த ஐ. நா. சிறுவர் நிதியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டவர்களில் இருந்து தெரிவு செய்யப்படுபவர்களுக்கே, இந்த திட்டத்தின் கீழ், சுயவேலை வாய்ப்புக்கான நிதி வழங்கப்பட இருக்கிறது. (ஒ-3)

# யாழ். பயணிகள் 200 பேர் வவுனியாவில் தங்கியுள்ளனர்

கொழும்பு, மார்ச் 5

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பயணிகள் சுமார் 200 பேர் வவுனியாவில் தங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா மாவட்டத்தில் தொடர்ந்து ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்து வருவதால் இவர்கள் தமது பயணத்தைத் தொடர முடியாமல் உள்ளனர்.

ரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள மண்டபத்தில் அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும், சமூக செயலகத் திணைக்களம் இவர்களுக்கு உணவு வழங்கி வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-த)

# வங்கிகளைக் கம்பனிகளாக மாற்றும் எண்ணமே இல்லை

## ஊழியர் சங்கத்திடம் பிரதமர் உறுதி

இரண்டு அரச வங்கிகளையும் கம்பனிகளாக மாற்றும் எண்ணம் அரசாங்கத்திற்கு என்றுமே இருந்ததில்லை.

பிரதமர் டி. பி. விஜேதுங்கா தம்மைச் சந்தித்த இலங்கை வங்கி ஊழியர் சங்கத் தூதுக்குழுவிடம் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

இரு அரச வங்கிகளையும் வர்த்தகமயமாக்கி சர்வதேச வங்கி நடைமுறைக்கு ஒப்பானதாக மாற்றவேண்டும் என்பதே அரசின் நோக்கம் என்றும் பிரதமர் தூதுக்குழுவிடம் தெரிவித்தார்.

[ஒ-எ-த]

# பிரச்சினைக்கு தீர்வு காணும் தருணம் வந்து விட்டது

## நாடாளுமன்றில் அஷ்ரப் தகவல்

வடக்கு-கிழக்குப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இவ்வாறு கூறினார்.

உதவி வழங்கும் நிறுவனங்களில் பெரிதும் தங்கியிருக்கும் எமது நாடு, தொடர்ந்தும் பாதுகாப்புச் செலவினத்துக்காக பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்து கொண்டிருக்க இயலாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

[ஒ-த]

## தமிழ் மக்களின் துயர் தீர வேண்டி

# யாழ்., நல்லூர்ப் பகுதிகளில் நாளை முதல் பாதயாத்திரை

## இந்து சமயப் பேரவை ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 5

நல்லூர், யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவுகளில் உள்ள சகல திருத்தலங்களுக்குமான பாதயாத்திரை நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது. பாதயாத்திரை தொடர்ந்து 13 தினங்கள்—எதிர்வரும் 18 ஆம் திகதி வரை நடைபெறும்.

யாழ். இந்து சமயப் பேரவை இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

போரின் கொடுமையால் வாடும் தமிழ் மக்களின் துயர் தீர இறை ஆசி வேண்டியும், இந்துக்கள் இடையே பக்தி உணர்வையும், தரும சிந்தனையையும் வளர்க்க வேண்டியுமே இந்தப் பாதயாத்திரை மேற்கொள்ளப்படுவதாக இந்து சமயப் பேரவையின் தலைவர் ஆத்மஜோதி திரு. நா. முத்தையா தெரிவித்துள்ளார்.

பாதயாத்திரை ஆரம்ப விழா நாளை (வெள்ளி) காலை 8 - 00 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இடம்பெறும்.

நாளைய தினம் நல்லூர்ப் பகுதியிலுள்ள 14 திருத்தலங்களுக்கு யாத்திரை நடைபெறும்.

தொடர்ந்து அரியாலை, கொழும்புத்துறை, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம், நீராவியடி, கந்தர்மடம், திருநெல்வேலி, கல்வியங்காடு, கோண்டாவில், கொக்குவில், வண்ணார்பண்ணை ஆகிய பகுதிகளிலுள்ள சகல திருத்தலங்களுக்கும் – திகதிவாரியாக-பாதயாத்திரைக் கோஷ்டியினர் பயணம் மேற்கொள்வர்.

இறுதி நாளான எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் பாதயாத்திரை பூர்த்தி விழா நடைபெறும்.

பாதயாத்திரைக் குழுவினர் இரவில் தங்கியிருக்கும் கோவில்களில் மாலை 5 மணி முதல் விசேட சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன.

பாதயாத்திரை இடம்பெறும் காலத்தில் ஆலயங்களையும், யாத்திரை செல்லும் வீதிகளையும் அலங்கரித்து, குழுவினரை பூரண கும்பங்கள் வைத்து வரவேற்குமாறு இந்து சமயப் பேரவை கேட்டுள்ளது.

அத்துடன் அடியார்களை பாதயாத்திரைக் குழுவினருடன் சேர்ந்து, சிறப்பிக்குமாறும் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

(ஒ)

# தங்கம் கடத்திய லெனின்!

கொழும்பு, மார்ச் 5

சொந்த மக்கள் பட்டினியாக வாடும் போது லெனின் ரஷ்யாவில் இருந்து தங்கத்தைக் கடத்து வெளியே கொண்டு சென்றார்.

கொழும்பில் உள்ள ரஷ்யத் தூதர் யூரி என். வினோகிரடேவ் முன்கண்ட தகவலை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மறைந்த சோவியத் யூனியன், கம்யூனிஸ்ட் கட்சிகளைக் கட்டி எழுப்புவதற்குப் பெருந்தொகைப் பணத்தை நாட்டுக்கு வெளியே அனுப்புவதையே கொள்கையாக வைத்திருந்தது. அது ஒழுக்கமற்ற நடவடிக்கையாகும்.

அது போன்ற நடவடிக்கையில் தற்போதைய ரஷ்ய அரசு ஈடுபடாது என்று அவர் சொன்னார்.

[ஒ-எ]

# செயலக அணி வெற்றி பெற்றது

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ். செயலக விளையாட்டுக் கழகத்துக்கும், மக்கள் வங்கி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் கடந்த ஞாயிறன்று நடந்த கிரிக்கெட் போட்டியில் செயலக அணி வெற்றி பெற்றது.

அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியில், செயலக அணி 6 விக்கெட் நஷ்டத்துக்கு 123 ஓட்டங்களையும், மக்கள் வங்கி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 48 ஓட்டங்களையும் பெற்றன. [ஒ-3]

# முல்லை. மாவட்டத்திலும் நடமாடும் செயலக சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 5

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிராமப் புற மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காண நடமாடும் செயலக சேவை நடைபெற்று வருகிறது.

வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களக்கட்டடத்திலும், முள்ளியவளையிலும் நடமாடும் செயலக சேவை இடம்பெற்றது.

எதிர்வரும் 18 ஆம் திகதி துணுக்காயில் நடமாடும் செயலக சேவை நடைபெற இருக்கிறது

அரச அதிபர் திரு. எஸ். தர்மகுலசிங்கம் தலைமையில் செயலக அதிகாரிகள் செயலக சேவையில் பணிபுரிந்தனர்.

[ஒ-3]

## கடலை எண்ணெய் உற்பத்தி

யாழ்ப்பாணம், மார்ச். 5

வடபகுதியில் உற்பத்தி செய்யப்படும் நிலக் கடலையில் இருந்து எண்ணெய்யைப் பெறும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழீழ ஆய்வு நிறுவனம் இதற்கான முழு முயற்சியையும் செய்து வருகிறது.

[ஒ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மணப்பெண் தேவை

யாழ். இந்து மத, 28 வயது பூராடம், செவ்வாய் தோஷ மற்ற, மிதுன லக்கின U.Kஇல் காசாளராக கடமையாற்றும், கம்பியூட்டர் துறையில் உயர் கல்வி கற்பவருக்கு 25 வயதுக்குட்பட்ட, A/L படித்த, அழகிய மணப்பெண் தேவை. U.Kஇல் வசிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். முழுவிவரங்களுடன் எழுதவும். இல. 389, C/o உதயன்.
[19936]

### ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கில (Stencils) ரைப்பிங் வேலைகள் செய்து கொடுக்கப்படும். பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 3 ஆம் ஒழுங்கை, கிளை பிரதான வீதி, சங்கானை.
[சி-1629]

### துர்க்கா திருமண சேவை

சகல தொழில்களிலும், மணமகன்கள் உண்டு. எல்லா மதங்களிலும் திருமணத் தொடர்பு செய்து கொடுக்கப்படும். ஜாதகம், புகைப்படத்துடன் எல்லா நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம், கே. கே. எஸ். வீதி, மல்லாகம்.
(5967)

### இலவச திருமண சேவை

29 வயது, செவ்வாய் 1இல் கார்த்திகை 4, கனடாவில் Electrical Engineer பட்டம் பெற்று, அங்கு தொழில் புரிபவருக்கு ஏற்ற மணப்பெண் தேவை. ஞாயிறு காலையில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
[5092]

### மயூரதி வெளியீடுகள்

1991 O/L உட்பட கணித வினாத்தாள்களும், செய்கைகளும் அடங்கிய மயூரதி வெளியீடுகள் விற்பனையாகின்றன. சிறந்த கணித நூல்களுக்கு மயூரதி வெளியீடுகள்: பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா மற்றும் புத்தகசாலைகளில்.
[5065]

## "A" LEVEL CENTRE

உயர் தராதரக் கல்வி நிலையம்,
பருத்தித்துறை வீதி,
1ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

**92 Batch**
சடப்பொருளியல்
ஆரம்பம்:-
07—03—1992 சனி
சனி, ஞாயிறு 11.00 - 12.00
ஆசிரியர்:-
Mr. ஜெயசீலன்
B. Sc. [Hons]

**93 Batch**
அச்சரகணிதம்
ஆரம்பம்:
07—03—1992 சனி
சனி, ஞாயிறு 4.00 – 5.00
காவிகள்
சனி, ஞாயிறு 5.00 – 6.00
ஆசிரியர்:
Mr. கணேசன்
B. Sc. [Hons]
[சி-1645]

### வினாத்தாள்

Proto Type Special Exam (விசேட முன்னோடிப் பரீட்சை) வினாத்தாள் விற்பனையாகின்றது personal New Science Centre, Jaffna. எழிலகம் முன்பாக.
[சி-1642]

### அச்சுக் கோப்பாளர்கள் தேவை

பிரபல அச்சுக்கூடமொன்றிற்கு அச்சுக்கோர்ப்பாளர் தேவை. பயிற்சியாளருக்கு முன்னுரிமை உண்டு. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 10-3-92க்கு முன் விண்ணப்பிக்கவும். இல. 833, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.
[சி/1648]

## கண்காட்சியில் உள்ளூர் உற்பத்திகள்

யாழ். இந்துக் கல்லூரியில் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினரால் நடாத்தப்பட உள்ள கண்காட்சி அறையில் எமது உள்ளூர் உற்பத்திகளாகிய,

★ ரொபி இனிப்பு வகைகள் ★ ஜீவாகாரம்
★ மிளகாய்த் தூள்
★ குரக்கன் மா மற்றும் ★ மா வகைகள்

அண்ணா கோப்பி போன்றவற்றை வாங்கி உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதோடு, ஒரு கலண்டரையும் இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அண்ணா தொழிலகம்,
இணுவில்.
(C/1647)

# இதய தெய்வத்திற்கு எங்கள் அஞ்சலி!



அமரர் கந்தசாமி ஜெகநாதன்
(ஜெகன்)

மண்ணில்: 19 - 12 - 1958
மனங்களில்: 26 - 02 - 1990

05 - 03 - 1992
2 ஆவது திதி நாள்

அண்ணல் ஜெகநாதா!
அன்பின் இருப்பிடமே,
ஆர்வத்தின் நிலைக்களமே,
இன்பம் தருபவரே,
ஈடிணையில் உத்தமரே,
உள்ளத்தில் உறைபவரே,
ஊக்கம் தருபவரே,
எல்லார்க்கும் நல்லவரே,
ஏக்கம் தவிர்ப்பவரே,
ஐயம் அளிப்பவரே,
ஒத்த மனதினரே,
ஓயாது உழைப்பவரே,
ஔவியங்கள் நீரகற்றி,
ஃஸ்மித்த ஈராண்டை-
எண்ணி புலம்புகிறோம்.

— குடும்பத்தினர்.

ராணி மில், நெல்லியடி,
செல்லம் மில், முள்ளியவளை.
[19950]

## PROFESSIONAL COMPUTER STUDIES

1. **d BASE III Plus**
(Special Course for Accounts Personals)
2. **Word Processing**
(Professional Course for all Secretaries)
3. **G. W. BASIC**
(Language Suitable for Beginners)

FOR DETAILS CONTACT:
R. Karthigesan,
No. 476, Chundikuli,
[Near Chundikuli, Old Park Road Junction]
[C-1650]

## வீடியோ கமெரா விற்பனைக்கு

புதிய Panasonic Video Camera விற்பனைக்கு உண்டு. Model M8000 [MSI Model மாதிரி] Complete Set.


தி. சிவநாதன் (மாஸ்ரர்),
மூத்தவிநாயகர் கோவிலடி,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.
[19953]

## உற்பத்தி பெருகிட....

உங்கள் வீட்டு மாமரங்கள் பூக்க ஆரம்பிக்கின்றன அல்லவா? இவை நன்றாகக் காய்த்து உயர் விளைவைத் தர வேண்டும் என்றுதானே விரும்புகிறீர்கள்? எமது விருப்பமும் அது தான். ஆயினும் ''மாவிலைத் தத்தியால்'' மாமரம் தாக்கப்பட்டு விளைவு குறைவடைகிறது என நீங்கள் மனம் வெதும்புவது எமக்குப் புரிகிறது. உங்கள் துயர் போக்க தமிழீழ ஆய்வு நிறுவனம் தயாராய் உள்ளது.

விவரங்களுக்கு:
தமிழீழ ஆய்வு நிறுவனம்,
தாவடி,
[சி-1577]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி சதாசிவம் தங்கம்மா
மண்ணிடை வரவு: 15 - 03 - 1933
விண்ணிடை விரைவு: 05 - 03 - 1991

வான்படைக் குண்டால்
வாழ்வது முடிந்து
விண்ணிடை சென்றிட்ட - எம்
கண்ணிறை அம்மா!
காலங்கள் இன்று
ஓராண்டு கடந்தது,
நூறாண்டு ஓடினும்
நின் நினைவு மறையுமா.

நினைவால் உருகும்:
கணவன், மகன், மகள்,
மருமகன், உறவினர்கள்

கிளி/முரசுமோட்டை,
பரந்தன்.
(19934)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## தமிழர் மனம் வெல்ல...

தமிழீழ விடுதலைப் புலிகளை வெல்வதற்குத் தமிழ் மக்களின் மனங்களை வெல்லும் புதிய உத்தியைக் கையாளப் போவதாக வடக்கு-கிழக்கு யுத்தத்தின் தளபதியான மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ தெரிவித்திருக்கிறார்.

வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களின் மனங்களை வெல்ல வேண்டும் என்று தென்னிலங்கையர் ஒருவர் கூறுவது இது முதற் தடவை அல்ல. ஜனாதிபதி பிரேமதாசா தொடக்கம் அமைச்சர்கள் பலரும் ஏனைய அரசியல்வாதிகளும் கடந்த இரண்டு வருடங்களாக, இதே கீறல் விழுந்த தட்டையே இசைத்துக் கொண்டிருக்கிறார்கள். தென்னிலங்கையில் உள்ள பத்திரிகையாளர்கள் பலரும் இந்த உத்தி குறித்து அரசியல் தலைவர்களுக்குப் புத்தி புகட்டியும் வருகிறார்கள்.

தமிழர்களின் வாழ்வுரிமைகள் யாவும் மறுக்கப்பட்டுள்ளன. அவர்கள் மீது ஒடுக்குமுறையும், அடக்குமுறையும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. அவற்றை எதிர்த்துப் போராட வேண்டும் என்று தமிழ் மக்கள் 1977 ஆம் ஆண்டிலேயே தமது வாக்குகள் மூலம் தீர்மானித்தார்கள். தங்கள் போராட்ட உணர்வை உலகத்துக்கு சனநாயக முறையில் மிக வெளிச்சமாக எடுத்துக்காட்டினார்கள்.

எனினும் தென்னிலங்கையர் தமிழர்களின் அந்த உணர்வை புரிந்து கொள்ளவில்லை. மேலும் மேலும் ஒடுக்க முயன்றார்களே அன்றி அவர்களின் உரிமைகளை வழங்கி, தமிழர்களின் மனங்களை வெல்ல முயற்சிக்கவில்லை. தமிழ் மக்களின் உரிமைக் குரலையும் சரி, பின்னர் வெடித்த போராட்டத்தையும் சரி நசுக்கிவிடலாம் என்ற கர்வத்துடன் இருந்தார்கள்.

இத்தனை கால இடைவெளியின் பின்னர், சொல்லில்வடிக்க முடியாத கொடுமைகளைப் புரிந்து, தமிழர்களை அழித்தொழிக்கவும் முற்பட்டவர்கள் இப்போது அவர்களின் மனங்களை வெல்ல முடியும் என்று நம்புவது வேடிக்கையானதாகும். யாதார்த்தம் புரியாத வெற்றுப் பிதற்றலாகும்.

தமிழ் மக்கள் சார்பில், அவர்களுக்காக உரிமைப்போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வருபவர்கள், சளையாது போராடி வருபவர்கள் விடுதலைப் புலிகள். உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்ற தமிழர்களின் இலக்கே விடுதலைப் புலிகளின் இலட்சியம். அவ்வாறிருக்க, தமிழர்களை அவர்களிடமிருந்து பிரிப்பது எப்படிச் சாத்தியமாகும்?

ஒரு சில சலுகைகளை வழங்கியும், பணம் பதவிகளைக் கொடுத்தும் தமிழர்களின் உள்ளங்களில் உறைந்து உருக்காகிவிட்ட உரிமைத் தாகத்தை நீக்கமுடியாது. அதனாலேயே அவர்கள் புலிகள் பக்கம் நிற்கிறார்கள்.

வெறும் பிரசாரப் போரினாலும் சலுகைகளாலும் தமிழர் உள்ளங்களை வெல்ல முடியும் என நினைப்பது மிகப் பெரிய தப்புக்கணக்காகும்.

தமிழ் மக்களோடு மக்களாக இயங்கும் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக ஒடுக்க முடியாது என்று அனுபவத்தில் உணர்ந்ததால் தான் தளபதியாரும் சாத்தியமாகாத ஒன்றை உத்தியாகத் தூக்கிப் பிடிக்கப் பார்க்கிறாரோ?

தமிழர்களின் உரிமைகளை வழங்காதவரை, அவர்களின் உள்ளங்களை எந்தத் தென் இலங்கையராலும் வெல்லவே முடியாது. இதுவே உண்மை. யதார்த்தம்.

# மேலதிக கிருமிநாசனிப் பிரயோகம் பயிர்களுக்கு பேரழிவை ஏற்படுத்தும்

## உரிய இடத்தில் ஆலோசனை பெறாததன் விளைவு இது

விவசாயிகள் இன்று எதிர் நோக்கி உள்ள முக்கிய பிரச்சினைகளில் ஒன்று பீடைகளைக் கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதே. விவசாயிகள் உரிய இடத்தில் தகுந்த ஆலோசனைகளைப் பெறத் தவறுவதே இந்த நிலைக்கு காரணம்
[சென்ற வாரக் கட்டுரையின் தொடர்ச்சி]

இன்று பல விவசாயிகள் பீடைகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

அடையாளம் காணமுடியாத புதுவிதமான பீடைகள் பயிர்களைத் தாக்கி வருகின்றன.

உச்ச விலையில் கிருமி நாசனி விற்கப்படும் இன்றைய காலத்தில் பீடைகளால் மோசமாகத் தாக்கப்படும் பயிர்களைக் கைவிடும் நிலையில் விவசாயிகள் இருந்து வருகின்றனர்.

பீடைகளைக் கட்டுப்படுத்த விவசாயிகள் உரிய இடத்தில் சரியான ஆலோசனை பெறாததே இந்த நிலைக்குக் காரணம் என்று கூறுகிறார். திருநெல்வேலியில் இயங்கும் விவசாயத் திணைக்கள உதவி

**விவசாயம்**

விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) திரு. கா. குணரட்ணம். பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்காக மேலதிகமான பீடை நாசனிகள் பிரயோகித்தல் போன்ற பொருத்தமற்ற வழி முறைகள் பல வருடங்களாகக் கையாளப்பட்டு வருவதன் நேரடி விளைவே இதுவாகும் என்கிறார் அவர்.

### பொருத்தமற்ற வழி முறைகளால் ஏற்படும் தாக்கங்கள்

மேலதிக பீடை நாசனிகள் பிரயோகித்தல் போன்ற பொருத்தமற்ற வழி முறைகளினால் பின்வரும் தாக்கங்கள் ஏற்படுகின்றன என்று விவசாயத் திணைக்களம் தெரிவிக்கிறது.

அவையாவன:-

★ பயிர்ச் செய்கையில்—விசேடமாக நெற்செய்கையில் கிடைக்கும் இலாபம் குறைகிறது.

★ தற்போது உள்ள பீடைகளை இலகுவில் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது.

★ மனித ஆரோக்கியத்துக்குப் பாதகம் ஏற்படுகிறது.

★ சூழல் மாசுபடுகிறது.

★ உற்பத்தியாளர்கள் அடையாளம் காண முடியாத புதிய பீடைகள் தோன்றுகின்றன.

பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு பின்வரும் ஒருங்கிணைந்த முறைகளைக் கைக்கொள்ளலாம்.

அவையாவன:-

★ காலத்தே பயிரிடுதல்

★ பயிரிடுவதற்கு முன் நிலத்தை சிறந்த முறையில் பண்படுத்துதல்.

★ சரியான பயிர் எண்ணிக்கையை வைத்திருத்தல்

★ சிறந்த நீர்ப்பாசனம்.

★ சமசீர் பசளைப்பிரயோகம்

பீடைகளுக்கு எதிர்ப்புத் தன்மை உள்ள பயிர்களைப் பயிரிடுவது —

பயிர்களை அடிக்கடி பரிசோதிப்பது —

பீடைச் சேதங்களை வயலில் சரியாக அளவிடுவது —

ஆகியவை மூலமும் பீடைகளைக் கட்டுப்படுத்தி பயிர்களைப் பாதுகாக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

### உயிரியல் இரசாயன முறைகள்

பயிர்களைத் தாக்கும் பீடைகளை, பூச்சி புழுக்களைக் கட்டுப்படுத்துவதற்கு உயிரியல் - இரசாயன முறைகள் பயன்படுத்தப் படுகின்றன.

### உயிரியல் முறை

பூச்சி புழுக்களை அழிப்பதில் சில பறவைகள் விவசாயிகளுக்கு துணை செய்கின்றன. கொக்கு இலைசுருட்டிப் புழுக்களை அழிக்கிறது. செம்பகம் அவரை இனப் புழுக்களை அழிக்கிறது. மற்றும் மைனா, அறக்கொட்டியான், தத்துவெட்டி, ஆகியவற்றையும் — லேடிபேர்ட் வண்டு அழுக்கணவனையும் — சிலந்தி, தும்பி என்பன தத்திகளையும் அழிக்கின்றன.

### இரசாயன முறை

பழ ஈயைக் கட்டுப்படுத்த சீனிக் கரைசலைப் பாவிக்க முடியும் என்று தெரிவிக்கப்

**சஞ்சாரன்**

படுகிறது. மற்றும் வேப்பம் விதை, எருக்கலை, வேப்பெண்ணை ஆகியவற்றைப் பயன்படுத்துவது மூலமும் பீடைகளை கட்டுப்படுத்தமுடியும். கோவாப்பயிருடன் தக்காளிச் செடிகளைப் பயிரிடுவது மூலம் விவசாயிகள் பீடைகளைக் கட்டுப்படுத்தி வருகின்றனர்.

கிருமி நாசனிகளைக் கலக்கும்போதும், விசிறும்போதும் பின்வரும் நடைமுறைகளைக் கடைப்பிடிப்பது அவசியம் என்று விவசாயத் திணைக்களம் தெரிவிக்கிறது.

அவையாவன:-

★ பாதுகாப்பான உடைகளை அணிதல்.

★ கையினால் கலக்காது ஒரு சுத்தமான தடியால் கலக்குதல்.

★ கிணற்றுக் கட்டுக்களில் வைத்து கலப்பதைத் தவிர்க்கவும்.

★ அடைபட்ட பீச்சு முனையை வாயினால் ஊதக் கூடாது.

★ கூடிய காற்று வீசும் நேரம் விசிறுவது தவிர்க்கப்படவேண்டும்.

★ தொடர்ச்சியாக நான்கு மணி நேரம் விசிறுவது தவிர்க்கப்படவேண்டும்.

★ விசிறி முடிந்ததும் உடைகளை நன்கு கழுவி சவர்க்காரம் தேய்த்துக் குளிக்கவும். ★

## இயற்கைப் பசளைகளும் அவற்றின் பெறுமானமும்

பயிர்களுக்கு செயற்கைப் பசளை வகைகளைவிட இயற்கைப் பசளைகளே சிறந்தவை. மாட்டெரு, ஆட்டெரு, கோழிஎரு, வைக்கோல் சணல், எருக்கலை (காய்ந்தது) ஆகியவை இயற்கைப் பசளைகளில் பிரதானமானவை ஆகும்.

இந்த இயற்கைப் பசளைகள் செயற்கைப் பசளை வகைகளைப் போன்று உடனடியாக முழுமையான போஷாக்கைப் பயிர்களுக்கு அளிக்காவிட்டாலும் இதன் பெறுபேறுகள் நாளடைவில் பயிர்களுக்குக் கிடைக்கக் கூடியதாக இருப்பதுடன், மண் வளம் பேணப்படுகிறது. மண் ஈரலிப்பைப் பிடித்து வைத்திருக்கும்.

இயற்கைப் பசளைகளும் அவற்றில் அடங்கியுள்ள சத்துப் பெறுமானங்களும்:-

| பசளை வகைகள் | நைதரசன் | பொஸ்பரஸ் | பொட்டாஸ் |
|---|---|---|---|
| மாட்டெரு | 0.60 | 0.15 | 0.45 |
| ஆட்டெரு | 0.95 | 0.25 | 1.00 |
| கோழி எரு | 0.66 | 1.75 | 0.80 |
| வைககோல் | 0.26 | 0.08 | 7.10 |
| சணல் | 0.75 | 0.12 | 0.51 |
| எருக்கலை | 0.75 | 0.12 | 0.51 |

# கனடாவில் தமிழ் கற்பிப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியது

## வாய்ப்பைப் பயன்படுத்த "ஒறேற்றர்" வற்புறுத்து

றொறண்டோ, மார்ச் 5

''கனடாவில் சில பாடசாலைகளில் தமிழ் மொழியைக் கற்பிக்க, அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இந்த வாய்ப்பை, ஒவ்வொரு தமிழனும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்''

கனடா, றொறண்டோ நகரில் அண்மையில் இடம் பெற்ற வரவேற்பு நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றும்போது மூதறிஞர் ''ஒறேற்றர்'' சுப்பிரமணியம் இவ்வாறு கூறினார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவர்கள், கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. ''ஒறேற்றர்'' சுப்பிரமணியத்திற்கு வரவேற்புபசார விழா ஒன்றை நடத்தினர்.

கல்லூரியின் பழைய மாணவரும், மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபருமான திரு. பொ. கனகசபாபதி நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.

முன்னாள் வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் சிறப்புரை நிகழ்த்தினார்.

வரவேற்பிற்குப் பதிலளித்துப் பேசுகையில் திரு. ''ஒறேற்றர்'' சுப்பிரமணியம் சொன்னதாவது:

கடல் கடந்து உலகெங்கும் சிதறி வாழும் தமிழர்கள் தமது தாய்மொழியையும் கலை, கலாசாரத்தையும் இழந்து விடக்கூடாது. இங்கு வாழுகின்ற தமிழ்ப்பெற்றோர் தமது குழந்தைகளுக்கு தமிழைப் பேசக் கற்றுக் கொள்ள மட்டுமல்ல, எழுதப் படிக்கவும் பழக்க வேண்டும்.

தமக்கு என்று தனித்துவமான மொழிகள் உள்ள இனங்களைச் சேர்ந்தவர்கள் தத்தமது இல்லங்களில் தாய் மொழியில் பேசுகின்றார்கள். ஆனால் கனடாவிலும் சரி இங்கிலாந்திலும் சரி எமது மக்கள் தங்கள் பிள்ளைகளுடன் ஆங்கிலத்திலேயே பேசுவது எனக்குக் கவலை அளிக்கிறது.

அனேகமாகத் தமிழ்க் குழந்தைகளுக்கு தமிழ் அரிச்சுவடியே தெரியாது. இந்த நிலையில் சென்றால் அவர்கள் விரைவில் தமது இனத் தனித்துவ அடையாளத்தை இழந்து விடுவார்கள்.

எமது தாய்நாட்டில் இன்று எத்தனையோ உயிரிழப்புக்களைச் சந்தித்த வண்ணம் திரு. பிரபாகரன் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார். இந்தப் போராட்டம் வெற்றியடைந்து தமிழர் ஆட்சி ஏற்படுகின்ற போது அங்கே போகப் போகின்ற உங்கள் குழந்தைகள் தமிழ் படிக்க — எழுதத் தெரியாத ஒரு தமிழனாக போகப் போவதை விரும்புகின்றீர்களா? — இவ்வாறு திரு. 'ஒறேற்றர்' சுப்பிரமணியம் தமது பேச்சில் குறிப்பிட்டார். (ஓ-எ)

## வறுமை நிவாரண முத்திரை

யாழ். மாவட்டத்திற்கான ஆறாவது தொடர் வறுமை நிவாரண முத்திரையின் 10 ஆம் இலக்கப் புள்ளிக்குரிய பொருள்கள் இம் மாதம் 10 ஆம் திகதி வரை விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. (த-30)

## ஜே. வி. பி. குறித்து அமைச்சரின் அச்சம்

கொழும்பு, மார்ச் 5

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தீவிரவாத ஜே. வி. பி. சந்தேக நபர்கள் ஜனநாயக ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியில் இன்னும் உறுதியாக இருக்கின்றனர்.

இப்படி அரசாங்கத்திற்குக் கிடைத்த புலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன

இதனால் நாட்டின் பாதுகாப்புக்கு இன்னும் அச்சுறுத்தல் இருப்பதாக அமைச்சர் வின்சென்ட் பெரேரா தெரிவித்திருக்கின்றார்.

(ஓ-எ)

## நாட்டுக்கூத்து கருத்தரங்கு

குருநகர், மார்ச் 5

யாழ். திருமறைக் கலாமன்றக் கேட்போர் கூடத்தில் நாளை மாலை 5 மணிக்கு ''கத்தோலிக்க நாட்டுக் கூத்து, கிராமியப் பாடல்களில் இலக்கண மதிப்பீடு'' என்னும் கருத்தரங்கு நடைபெறும்.

கவிஞர் தேவதாஸன், ஆசிரியர் திரு எ. ம. யோசேப் தலைமையில் மேற்படி தலைப்பில் கருத்துரை வழங்குவார். [ஓ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பலாலியில் தடுத்துவைக்கப்பட்டுள்ளோரை

# செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் மாதம் ஒரு தடவை பார்வையிடுவர்

யாழ்ப்பாணம், மார்ச் 5

பலாலியில் இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை மாதம் ஒரு தடவை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் பார்வையிடுவர்.

இது தொடர்பான இணக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவைச் சேர்ந்த செல்வி மரிஜோ கடந்த ஞாயிற்றுக்கிழமை பலாலி சென்று அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைச் சந்தித்து அவர்கள் தமது உறவினருக்கு எழுதிய கடிதங்களை எடுத்து வந்தார்.

அக்கடிதங்கள் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. [இ-3]

## யாழ். ஆஸ்பத்திரி குறைபாடு குறித்து கொழும்பில் பேச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ். ஆஸ்பத்திரியில் நிலவும் குறைபாடுகள் குறித்து கொழும்பில் பேச்சு நடத்த வைத்தியக் குழு ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை கொழும்பு செல்கிறது.

ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் செல்வி. எஸ். பொன்னுத்துரை தலைமையில் இந்தக் குழு 'குமண' கப்பலில் செல்கிறது. [உ-3]

## தீவுப்பகுதி அகதிகளுக்கு கெற்பலியில் பாடசாலை

### அரச அதிபர் திறந்துவைத்தார்

யாழ்ப்பாணம், மார்ச் 5

தீவுப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து கெற்பலியில் தங்கியுள்ளவர்களுக்காக, பாடசாலை ஒன்று நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இதனைத் திறந்து வைத்தார்.

செயலக புனர்வாழ்வுப் பிரிவு, தொண்டர் நிறுவனங்கள் இணைந்து கெற்பலியில் அமைத்துள்ள இந்த பாடசாலைக்கு தேவையான ஆசிரியர்கள், மற்றும் பாடப்புத்தக வசதிகளை யாழ் கல்வி அலுவலகம் செய்திருந்தது.

பாடசாலை ஆரம்பவிழாவில் வட பிராந்திய கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம், செயலக திட்டப் பணிப்பாளர் எஸ். பத்மநாதன் உட்பட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர். [இ-3]

## நேர்முக பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்புளோமா முழு நேரப் பயிற்சி பெறும் வெளி மாவட்ட மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் நாளை வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ளன. [இ-3]

## உலகக் கிண்ண கிரிக்கெட்: இந்தியாவுக்கு முதல் வெற்றி!

சிட்னி, மார்ச் 5

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி, பாகிஸ்தான் அணியை 43 ஓவர்களால் தோற்கடித்தது.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் இது இந்தியாவின் முதலாவது வெற்றியாகும். இதற்கு முன்னர் இந்தியா பங்கு பற்றிய மூன்று ஆட்டங்களில் இரண்டில் அது தோல்வியடைந்ததும் ஸ்ரீலங்காவுக்கு எதிரான ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்டதும் தெரிந்தவையே.

நேற்றைய ஆட்டத்தில் வெற்றி பெற்றதன் மூலம் இந்தப் போட்டித் தொடரில் தொடர்ந்து முன்னேறும் வாய்ப்பை நழுவ விடுவதில் இருந்து இந்தியா தப்பிக் கொண்டது.

நேற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 49 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 216 ஓட்டங்களை எடுத்தது. இந்தியத் தரப்பில் இளம் வீரர் சச்சின் டெண்டுல்கர் 62 பந்துகளை எதிர்நோக்கி ஆட்டமிழக்காமல் 54 ஓட்டங்களைப் பெற்றார். கபில் தேவ் 35 ஓட்டங்களை அடித்தார்.

பதிலளித்தாடிய பாகிஸ்தான் அணி 48.1 ஓவர்களில் 173 ஓட்டங்களுக்கு சகலவிக்கெட்டுகளையும் இழந்தது.

இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் சிறந்த ஆட்டக்காரராக தெரிவு செய்யப்பட்டார். [உ-எ]

## மக்கள் குடியிருப்பு.....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மக்கள் அதிர்ச்சியும் பதற்றமும் அடைந்தனர்.

மேற்கண்ட இடங்களுக்கு சமீபமாக உள்ள ஊர்களில் ஷெல்கள் ''விண்'' கூவிக் கொண்டு மேலே சென்றதால் அப்பகுதி மக்களும் பதற்றமுற்றனர்.

வள்ளியம்மையின் மகளான யோகநாதன் லோகேஸ்வரி படுகாயமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதே வீட்டில் [முகாமில்] தங்கியிருந்த மற்றும் ஐவர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

அராலி தெற்கு சிவன் கோவிலடிக்கு அண்மையில், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட அகதி முகாமுக்கு அருகிலும் பல ஷெல்கள் விழுந்து வெடித்தன. தெய்வாதீனமாக எவருக்கும் உயிராபத்து உண்டாகவில்லை.

### அராலியில்

செவ்வாய் நள்ளிரவு 12 மணியிலிருந்து அராலியில் மக்கள் குடியிருப்புகளை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

மண்கும்பான், மண்டைதீவு, காரைநகர், பலாலி ஆகிய எல்லாப் பகுதிகளில் இருந்தும் அராலியை நோக்கிச் ஷெல் வீச்சு நடத்தப்பட்டது.

அராலி கிழக்கைச் சேர்ந்த விஜயரத்தினம் என்பவருக்குச் சொந்தமான வீட்டில் தீவகம், பொன்னாலைப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வந்த ஐந்து அகதிக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்கியிருந்தனர். அந்த வீட்டின் மீது விழுந்த ஷெல்லுக்கு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் பலியாகினர்.

பொன்னுத்துரை வள்ளியம்மை [50 வயது], பொன்னுத்துரை சிவகுமார் [15 வயது], பொன்னுத்துரை சந்திரன் [10 வயது], வள்ளியம்மையின் பேரப் பிள்ளைகளான யோகநாதன் யோகரஞ்சினி [12 வயது], யோகநாதன் ரஞ்சினிமலர் [3 வயது] ஆகியோர் அந்த இடத்திலேயே பலியாகினர். 3 வயதுச் சிறுமியின் தலை துண்டிக்கப்பட்டிருந்தது.

இத்தாக்குதல்களைத் தொடர்ந்து இப்பகுதியில் குடியமர்த்தப்பட்டுள்ள 400 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 2,000 அகதிகள் வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பலர் அவ்வாறே நேற்றுச் சென்றதைக் காண முடிந்தது.

### யாழ். நகரில்

மண்கும்பான், மண்டைதீவு இராணுவ முகாம்களிலிருந்து செவ்வாய் நள்ளிரவு பரவலாக ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ஷெல் வீச்சு நடத்தியபோது, ''பரா'' வெளிச்சக் குண்டுகளும் வீசப்பட்டன. ஹெலிக்கொப்டர் ஒன்றும் கலிபர் தாக்குதலை நடத்தியது.

பண்ணை, கோட்டைப் பகுதி, அலுப்பாந்தி, கொட்டடி ஆகிய பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. தெய்வாதீனமாக உயிராபத்து இல்லை. ஷெல் வீச்சு நடந்த வேளை துப்பாக்கிப் பிரயோகச் சத்தமும் கேட்டது.

நேற்று [புதன்] நண்பகல் பூநகரி கல்முனை இராணுவ முகாமில் இருந்து அரியாலை கிழக்கு கரையோரப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. [அ-5-12-51-3-15-131]

## கைப்பற்றப்பட்ட..

[3ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ ஏ. கே. ரவைகள் — 11000
★ ஏ. கே. மகஸீன்கள் — 37
★ கிளைமோர் [வெடிக்கவைக்கும் சாதனங்கள்] — 3
★ வயர் றோல் — 1

(உ-5)

## பழுதடைந்த..

(1ஆம பக்கத் தொடர்ச்சி]

தடைந்தவை என்று கொழும்பில் வைத்தே கண்டுபிடிக்கப்பட்டது. இது குறித்து உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அந்த அரிசியை இறக்கிவிட்டுப் பதிலாக வேறு அரிசி எடுத்துவரப்படும் என இங்கு தகவல் கிடைத்தது.

ஆனால் கடைசி நேரத்தில் அரிசியைச் சோதித்த உணவு பரிசோதனைப் பகுதியினர், அதற்குப் புகையூட்டி தொற்று நீக்கிவிட்டு (Fumigation) யாழ்ப்பாணம் எடுத்துவர அனுமதித்துள்ளதாக நேற்று இங்கு தகவல் கிடைத்தது.

இந்த அரிசி இங்கு கப்பல் மூலம் வந்து சேர்ந்ததும் சுகாதார அதிகாரிகளைக் கொண்டு அரச அதிபர் பரிசோதனை செய்வார் என்றும்—

மனித பாவனைக்கு உதவாத அரிசி எனக் காணப்பட்டால் திருப்பி அனுப்பப்படும் என்றும் — சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. [அ-3]

## விகாரையில்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாளர்கள் என்று கொழும்பில் அரச சார்புப் பத்திரிகைகள் வர்ணித்தன.

இதற்கிடையில்—

இவர்கள் அனைவரையும் உடன் விடுதலை செய்யுமாறு தென்பகுதி பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த மாணவர் அவைகளும், அதிகாரிகளும் கோரிக்கை விடுத்திருக்கின்றனர். [உ-5]

## தீவக..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கேசன்துறைக்கும் பின்னர் காங்கேசன் துறையில் இருந்து குமண கப்பல் மூலம் பருத்தித்துறைக்கும் அழைத்து வரப்பட்ட இவர்கள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவியுடன் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். [இ 3-165-131]

## மணலாறில்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டது

நேற்று முன்தினம் இரவு 9.20 மணியளவில் நடத்தப்பட்ட இந்த அதிரடியின் போது படையினரின் மூன்று காவலரண்களை புலிகள் கைப்பற்றினர். பின்னர் அவை தகர்க்கப்பட்டன. காவலரண்களில் இருந்த படையினரே உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயங்களுடன் தப்பிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவுக்கு அருகே வெலிஓயாப் பிரதேசத்தில் இத்தாக்குதல் நடைபெற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-எ-த-3 5)

## மரண அறிவித்தல்கள்

### பெரியதம்பி நாகலிங்கம்

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகலிங்கம் அவர்கள் நேற்று (செவ்வாய்கிழமை) 69, சிவ நகர், உருத்திரபுரம் இல்லத்தில் காலமானார். இவர் காலஞ் சென்ற வீரகத்தி பெரியதம்பி பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்ற சின்னப்பிள்ளையின் அருமைக் கணவரும், திருநாவுக்கரசு, பறுவதம், பொன்னம்மா, வள்ளிப்பிள்ளை, செல்லமுத்து, இலட்சுமணன், சுந்தரராசா [புங்குடுதீவு, மண்டைதீவு கிராம அலுவலர்], காலஞ் சென்ற சிவபாக்கியம் ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசா, ஆனந்தமூர்த்தி, சாந்தலிங்கம், வைத்திலிங்கம், ஞானசக்தி, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (5. 3. 92) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அவரது சிவ நகர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உருத்திரபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை சுற்றத்தார், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. சுந்தரராசா.
(மகன்)

558/4. கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(19957)

### திருமதி சுப்பிரமணியம் செல்வநாயகி

அல்லாரை வடக்கு மீசாலையைச் சேர்ந்த திருமதி சுப்பிரமணியம் செல்வநாயகி அவர்கள் 4-3-1992 புதன்கிழமை இறைபதமெய்திவிட்டார்.

அன்னார் காலம்சென்ற த. சுப்பிரமணியம் [சக்கடத்தார் - நிர்வாக உத்தியோகஸ்தர், நீர்ப்பாசனத் திணைக்களம்] அவர்களின் அன்பு மனைவியும், கமலாம்பிகை, ஸ்ரீதரன் [நீர்ப்பாசனத் திணைக்களம், பொத்துவில்], வரேந்திரன், ஜெகதாம்பிகை [வீதி அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்], ஞானாம்பிகை [லண்டன்], கருணாகரன் [தொலைத் தொடர்புத் திணைக்களம், கொழும்பு], கருணாநந்தன் [சுவிஸ்], ஜெகதீஸ்வரன் [சுவிஸ்], அமிர்தாம்பிகை [லண்டன்] இவர்களது தாயாரும், திரு. கு. அரசநாதன் [கட்டடப் பொருள் கூட்டுத்தாபனம், வவுனியா], திருமதி சிறீமஞ்சுளா [ஆசிரியை, கொழும்பு], லீலாவதி, திரு. வீ. சிவப்பிரகாசம் [கல்வித் திணைக்களம், கிளிநொச்சி], திரு. சி. மகேஸ்வரன் [M L.T லண்டன்], சுகன்யா, சிவக்கொழுந்து [சுவிஸ்], தங்கராசா [லண்டன்] இவர்களது மாமியாரும், தயானந்தன் [சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்], அஞ்சுலன் [இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்], அச்சுதன் [ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை], மயூரன், ஜெகதீஸ்வரன், தட்சாயினி, ஹரிபிரசாத், சிந்துஜன், தனுஜன் ஆகியோரின் பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 5-3-1992 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு சாவகச்சேரி இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

தகவல்:
வீ. சிவப்பிரகாசம்

இல.10, கண்டுவில் ஒழுங்கை,
சாவகச்சேரி,

(19964)

(மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்திலும்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 5-3-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org